நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு), தஞ்சாவூர் மண்டலம்
தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள்

18

முன்னிலை:- திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்.1868/2017 தம3 நாள்: 19.03.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம் - திருவாரூர் மாவட்டம் - நன்னிலம் வட்டம் - கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம் - வண்டாம்பாளை ஊராட்சி மற்றும் கிராமம் - நி.அ.எண்கள்: 28/3-ல் 198595.80.அடி (அ) 18450ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. மனுதாரர் திரு.B.தியாகராஜன், அவர்களின் விண்ணப்பம் நாள்: 08.01.2018
2. அரசாணைஎண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
3. அரசாணை எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 13193/2017/LA1 நாள்: 03.11.2017

---

## உத்தரவு:-

பார்வை 1-ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் தொடர்பான விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை (3)ல் கண்டுள்ள அரசாணையின் படியும், பார்வை (4)ல் கண்டுள்ள சுற்றறிக்கையின் படியும், மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டதனை தொடர்ந்து,மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ.(த.ம)எண்: 128/2018 என எண்ணிடப்பட்டு, கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட இரண்டு வரைபட நகல்கள் இத்துடன் இணைத்து வட்டார வளர்ச்சி அலுவலர், கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

### அ) கூராய்வு கட்டணம்:

பார்வை (2)ல் கண்ட அரசாணை விதி எண்: 12-ன் படி, உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு மனைப்பிரிவு அபிவிருத்தியாளர் கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூபாய்.500/-வீதம் விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு மட்டும் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், விற்பனை செய்யப்பட்ட மனைகளுக்கு மனை உரிமையாளர் கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூபாய்.500/-ஐ இணையதளம் மூலம் செலுத்தப்பட்டு பெறப்பட்ட பின்னரே வட்டார வளர்ச்சி அலுவலர், கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம் அவர்கள் மனைகளை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

அ) வரன்முறைக்கட்டணம்:

பார்வை (2)ல் கண்ட அரசாணை விதி எண். 9-ன் படி சதுர மீட்டருக்கு ரூ.30/- என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து தொகையினை கீழ்க்கண்ட அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்ட, பின்னரே மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். (உதாரணமாக, 237.83ச.மீ பரப்பளவுள்ள மனை எண்: 4-க்கான வரன்முறைக் கட்டணம் = 237.83 X 30 = ரூ.7135/-ஆகும்).

**Head Of Account:**

**0217 Urban Development**
**60 Other Urban Development Schemes**
**800 Other Receipts**
**AT Receipts under Regularistion Charges of Unapproved Layouts and Plots –DTCP**
**(DPC: 0217 60 800 AT 0007)**

இ).வளர்ச்சிக் கட்டணம்:

பார்வை (3)ல் கண்ட அரசாணை விதி எண்: 10-ன் படி சதுர மீட்டருக்கு ரூ. 25/- என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து, வசூல் செய்து தொகையினை உள்ளாட்சி தனியாக கணக்கு தொடங்கி, அக்கணக்கில் செலுத்தப்பட்டதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும். (உதாரணமாக, 237.83ச.மீ பரப்பளவுள்ள மனை எண்: 4–க்கான வளர்ச்சிக்கட்டணம் = 237.83 X 25 = ரூ.5946/-ஆகும்).

ஈ).திறவெளி ஒதுக்கீடு:

பார்வை (3)ல் கண்ட அரசாணையின் படி விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு கீழ்க்கண்டவாறு பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(i) மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு: 198595.80ச.அடி

(ii) விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பு: 53456.00ச.அடி

(iii) விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு தேவையான பூங்கா பரப்பு: 5345.60ச.அடி (10.0%)

(iv) ஒப்படைப்பு செய்யப்பட வேண்டிய பூங்கா I & II பரப்பு: 5376.00ச.அடி (10.06%)

(v) மனைகள் விற்பனை செய்யப்பட்ட விபரம்:
மனை எண்கள்: 1 – 14, 16, 24, 25, 30 – 33, 35 – 47, 52 – 55, 57 – 59, 61 - 63

II.நிபந்தனைகள்:

1. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் நிலகையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும், வட்டார வளர்ச்சி அலுவலர், கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம் அவர்களை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. உள்ளாட்சிகளின் சட்டம் மற்றும் அரசாணைகளின் படி மனைப்பிரிவு சாலைகளை தானமாகப் பெற்று அல்லது நிலையில் உள்ள வழிகாட்டுதலின் படி மனைப்பிரிவு சாலைகளை தன்னிச்சையாக உள்ளாட்சி உரிமை மற்றும் பராமரிப்பிற்கு எடுத்துக்கொண்டதற்கான விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். மேலும், மனைப்பிரிவிற்கு அமையும் அணுகுசாலை பொதுசாலையாக உள்ளதா என்பதனை உள்ளாட்சி உறுதி செய்த பின்னரே வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

3. இந்த கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின், சாலைகள் மற்றும் திறவிட ஒதுக்கீடுக்கான நிலங்களை உள்ளாட்சி பெற்றுக்கொண்டதற்கான அல்லது உள்ளாட்சி வசம் எடுத்துக் கொண்டதற்கான பத்திரம் மற்றும் ஆவணங்களை வருவாய்துறை ஆவணங்களில் பதிவு செய்யும் பொருட்டு சம்மந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும்.

4. இந்த மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் மூலம் மனைப்பிரிவில் அமையும் தனி மனைகளையும் வரன்முறைப்படுத்தப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

5. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.

6. விதி எண்:16-ன் படி உள்ளாட்சி தனியாக ஒரு கணக்கு தொடங்கி இந்த மனைப்பிரிவு வரன்முறைத்திட்டத்தின் கீழ் வசூல் செய்யப்படும் வளர்ச்சிக் கட்டணங்களை அதில் செலுத்தி, பராமரித்து வர வேண்டும்.

7. அரசாணை விதி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் எவையும் இந்த மனைப்பிரிவுக்குப் பொருந்தாது அல்லது கட்டுப்பாடுகளின் கீழ் வராது என்பதனை வட்டார வளர்ச்சி அலுவலர், கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

8. கூராய்வு கட்டணம், வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் இவைகளை மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதனை உறுதி செய்த பின்னர் தனிமனைகளை உள்ளாட்சி வரன்முறை செய்து கொடுக்க வேண்டும். தனி மனைகளை வரன்முறைப்படுத்தப்பட்ட விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

9. பார்வை (4)ல் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமூடக்கு மற்றும் பூங்கா பகுதிகள் உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் பதிவு செய்ய சம்மந்தப்பட்ட சார்பதிவாளர், பதிவுத்துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட திறவிடங்கள் உள்ளாட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4..

21

10. பார்வை (4)ல் தெரிவிக்கப்பட்டவாறு சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமுடக்கு மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் சம்மந்தப்பட்ட உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை அவர்கள் உட்பிரிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்க்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

11. பார்வை (4)ல் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமுடக்கு மற்றும் பூங்கா பகுதியினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, சார்பதிவாளர், பதிவுத்துறை, வட்டாட்சியர் மற்றும் உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை ஆகியோருடன் ஒருங்கிணைந்து பத்திரப்பதிவு மற்றும் உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 198595.80ச.அடி | -- |
| ஒதுக்கிய மனைகள் | 67 | -- |
| பூங்கா | பூங்கா 1 – 3457.00ச.அடி<br>பூங்கா 2 – 1919.00ச.அடி<br>மொத்தம் - 5376.00ச.அடி | 10.06% |

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்,(பொறுப்பு).,
தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்.

பெறுநர்:
வட்டார வளர்ச்சி அலுவலர்,
கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம்,
திருவாரூர் மாவட்டம். — இரண்டு வரைபட தொகுப்புகள்

நகல்:
1. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
திருவாரூர்,
திருவாரூர் மாவட்டம். — ஒரு வரைபட தொகுப்பு

2. உதவி இயக்குநர்,
நில அளவை பதிவேடு துறை,
மாவட்ட ஆட்சியரகம்,
திருவாரூர் மாவட்டம். — ஒரு வரைபட தொகுப்பு

3. வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
நன்னிலம் வட்டம்,
திருவாரூர் மாவட்டம். — ஒரு வரைபட தொகுப்பு

நகல்:
திரு.B.தியாகராஜன்,
மாரியம்மன் கோவில் தெரு,
வண்டாம்பாளை,
நன்னிலம்,
திருவாரூர் மாவட்டம்.

அலுவலக முகவரி:
நகர் ஊரமைப்பு துணைஇயக்குனர்
அலுவலகம்,தஞ்சாவூர் மண்டலம்
எண்.33,ராஜப்பா நகர் 4வது தெரு,
மருத்துவக் கல்லூரிச் சாலை,
தஞ்சாவூர் - 613 007.
மின்அஞ்சல்:-ddtjrregion@gmail.com

23

கொரடாச்சேரி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை. திரு. வே. வாசுதேவன், பி.எஸ்.சி., பி.எட்.,

ந. க. எண்: 1074 / 2018 / ஆ3 நாள்: 01.06.2018

பொருள்: **அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம் - திருவாரூர் மாவட்டம் - கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம் - வண்டாம்பாளை ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவை எண்கள் 28/3-ல் - 198595.80 சதுர அடி - பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டது வரன்முறைக்கட்டணம் வளர்ச்சி கட்டணம், பூங்கா ஒதுக்கீடு பெறப்பட்டது வரன்முறைபடுத்தி இறுதி உத்தரவிடல் - தொடர்பாக.**

பார்வை: 1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு), தஞ்சாவூர் மண்டலம் செ. மு. ந. க. எண்: 1867 / 2017 / தம3 நாள்: 19.03.2018
2. தனியரது கடிதம் நாள்: 01.06.2018
3. மற்றும் இதா தொடர்புடைய ஆவணங்கள்

********************

உத்தரவு

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி வட்டாரம், வண்டாம்பாளை ஊராட்சிக்குட்பட்ட நில அளவை எண்கள் 28/3-ல் - 198595.80 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மனைப்பிரிவு வரைபடத்திற்கு பார்வை 1-ன்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு), தஞ்சாவூர் அவர்களால் கொ. ஒ. ம. வ. / ந. ஊ. து. இ (த.ம) எண்: 128 / 2018-ன்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு. எஸ். பாலசுப்ரமணியன், வண்டாம்பாளை என்பவரால் விற்பனை செய்யப்படாத மனைப்பிரிவுகளுக்கு உண்டான பூங்கா மற்றும் சாலை தனி அலுவலர், வண்டாம்பாளை ஊராட்சி என்ற பெயருக்கு இனாம் சாசனம் செய்து தரப்பட்டுள்ளது.

பார்வை 1-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு வரன்முறை கட்டணம் ரூ. **149041/-** (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து நாற்பத்து ஒன்று மட்டும்)-ஐ திருவாரூர் பாரத மாநில வங்கியில் அரசு தலைப்பில் செ. சீட்டு எண்: இல்லை / நாள்: 01.06.2018-ன்படியும், வளர்ச்சிக் கட்டணம் ரூ. **1,24,200/-** (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரத்து இருநூறு

25

மட்டும்)-ஐ வங்கி வரைவோலையாகவும் (எண்: 332883 நாள்: 01.06.2018-ன்படி) செலுத்தியுள்ளார். அத்தொகை மனைப்பிரிவு வளர்ச்சிக் கட்டணம், வண்டாம்பாளை ஊராட்சி, என்ற பெயரில் கங்களாஞ்சேரி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உரிய ஊராட்சி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கொரடாச்சேரி வட்டாரம், வண்டாம்பாளை ஊராட்சியில் புல எண்கள்: 28/3-ல் - 198595.80 சதுர அடி அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள விற்கப்படாத மனைகளை வண்டாம்பாளை ஊராட்சி மன்றத் தீர்மான எண்:42 நாள்:07.05.2018-ன்படி கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் வரன்முறைபடுத்தி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின்மீது நில கையகப்படும் நடவடிக்கை ஏதும் பின்னர் கண்டறியப்படின், அதற்கு மனைப்பிரிவு உரிமையாளரே முழு பொறுப்பேற்க வேண்டும்.
2. உள்ளாட்சிகளின் சட்டம் மற்றும் அரசாணைகளின்படி மனைப்பிரிவு சாலைகளை தானமாகப் பெற்று அல்லது நிலையில் உள்ள வழிகாட்டுதலின்படி மனைப்பிரிவு சாலைகளை தன்னிச்சையாக ஊராட்சி உரிமை மற்றும் பராமரிப்பிற்கு பொதுநலன் கருதி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் நீள அகல குறைபாடுகள் ஏதுமிருப்பின் அதை மனுதாரர் சரி செய்து தர வேண்டும் அல்லது அதற்கு ஈடான தொகையினை அரசு நெறிகாட்டு வழிமுறைகளின்படி செலுத்திட வேண்டும்.
3. மனைபிரிவு உரிமை குறித்து பின்னர் நீதிமன்ற தாவா ஏதும் ஏற்படின் மனுதாரரே முழு பொறுப்பேற்று தம் சொந்த செலவில் தீர்த்து வைக்க வேண்டும்.
4. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமுடக்கு மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சிக்கு உரிமையாக்கும் வகையில் சம்மந்தப்பட்ட உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை மூலம் உட்பிரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்போது மனைப்பிரிவு உரிமையாளர் உரிய காலத்தில் முழு ஒத்துழைப்பு நல்கி அப்பணியை முடித்து தர வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பிற ஆவணங்கள் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டவை. எதிர்வரும் காலங்களில் சரியானவையல்ல என்ற அவைகள் அறியப்பட்டாலோ அல்லது மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் அரசிற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய சூழல் ஏற்பட்டாலோ மனைப்பிரிவிற்கு

வழங்கப்பட்ட ஒப்புதலை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்ய முழு அதிகாரம் உண்டு.

6. வளர்ச்சி கட்டணம் மற்றும் வரன்முறை கட்டணம் செலுத்தியதில் விடுதல் மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டிற்காக எதிர்வரும் காலத்தில் அரசால் கட்டணம் ஏதும் நிர்ணயம் செய்தாலோ அத்தொகையினை செலுத்திட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவின் வரைபடத்தை எவ்வித மாற்றமுமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6 x 4 அளவிலான தகவல் பலகையினை பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக அமைத்திட வேண்டும்.
8. விற்பனைக்குண்டான மனையினை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினையும் மனை வாங்குவோருக்கு கட்டாயம் வழங்க வேண்டும்.
9. மனைபிரிவிற்கு அருகிலுள்ள ஆறு, குளம் மற்றும் வாய்க்கால் போன்ற நீர்நிலை புறம்போக்கு உட்பட பிற அரசு புறம்போக்கினை ஆக்கிரமணம் செய்யக்கூடாது.

இணைப்பு: வரைபடம் -1

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
கொரடாச்சேரி.

பெறுதல்

திரு. எஸ். பாலசுப்ரமணியன்,
மாரியம்மன் கோவில் தெரு,
வண்டாம்பாளை,
நன்னிலம் தாலுக்கா.

நகல்: ஊராட்சி செயலர், வண்டாம்பாளை ஊராட்சி.
நகல்: சார்பதிவாளர், திருவாரூர்
நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருவாரூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு தகவலுக்காக.